2nd November 1966]

(இ) அதன் மேல் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இலுப்பூரில் உள்ள டிஸ்பென்சரியை ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்ற கோரிக்கைகள் இதுவரையில் அரசாங்கத்திற்கு வந்ததாகத் தெரியவில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*337 **கேள்வி.—திருமதி செகதாம்பாள் வேலாயுதம் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உடையார்பாளையம் தாலுக்காவில் எத்தனை இடங்களில் (Primary Health Centres) ஆரம்ப சுகாதார நிலையங்கள் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது ?

(இ) எப்போது இவைகளுக்கான வேலைகள் மேற்கொள்ளப்படும் ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) திருமானூர், அரியலூர், டி. பாலூர், செந்துறை ஆகிய இடங்களில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. ஜெயங்கொண்டானில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. டாக்டர் நியமிக்கப்பட்டவுடன் அது செயல்படத் தொடங்கும். ஆண்டிமடம் வளர்ச்சி வட்டாரத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றை ஏற்படுத்த 1966 ஜூலையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திருமதி செகதாம்பாள் வேலாயுதம் : தலைவர் அவர்களே, ஆண்டிமடத்தில் ஏற்பட இருக்கிறது என்றார்கள். ஜெயங்கொண்டானில் மருத்துவ மனை வருவதுபற்றி இரண்டு, மூன்று முறை கேட்டும் விமோசனம் இல்லை. அங்கு கட்டடம் கட்டுவது எப்படியிருக்கிறது ? பெரிய மருத்துவ மனையாக ஆக்குவதுபற்றிக் கவனிக்கப்படுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஜெயங்கொண்டானில் மீன்சுருட்டியில் வைக்கவேண்டும் என்று போட்டிருக்கிறது.

கட்டுமரத்திற்குத் தேவையான காட்டுவகை மரம்

*338 **கேள்வி.—திரு. எம். எஸ். செல்வராஜன் :** கனம் கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கட்டுமரத்திற்குத் தேவையான அல்பீஸியா மரம் நமது ராஜ்யத்தில் எங்கேனும் பயிர் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?